**Media:** Tamil Murasu
**Date:** 17 November 2023
**Page:** 1

# மூத்தோர் வாழ்வு சிறக்க $800 மில்லியன் ஒதுக்கீடு

சமூகத்தில் உள்ள மூத்தோர் சிறப்பான முறையில் தங்களது இல்லத்திலேயே முதுமையை எட்ட சிங்கப்பூர் $800 மில்லியன் மதிப்பீட்டில் புதிய திட்டத்தை வகுத்து உள்ளது.

அதிகமானோருக்குப் பலனளிக்கவும் தங்களது திட்டங்களின் அளவையும் தரத்தையும் அதிகரிக்கவும் மூத்தோர் நடமாட்ட நிலையங்களுக்கு அந்தத் தொகை கைகொடுக்கும்.

சிறப்பான முறையில் முதுமையை எட்டுவதற்கான 'ஏஜ் வெல் எஸ்ஜி' திட்டத்திற்கு பல அமைச்சுகள் ஆதரவளிக்கின்றன. அதுபற்றிய விவரங்களையும் நிதி ஒதுக்கீடு பற்றிய தகவலையும் சுகாதார அமைச்சர் ஓங் யி காங் வியாழக்கிழமை வெளியிட்டார்.

"தனிமையும் சமூகத்தில் ஒன்றிணையாததும் பல மூத்தோருக்கு ஆகப் பெரிய எதிரிகளாக திகழ்கின்றன. மூத்தோரின் உடல் நிலை மோசமடைய அவையும் காரணங்கள்.

"எனவேதான், அவர்கள் சமூகத்துடன் இணைந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்," என்றார் அமைச்சர் ஓங்.

'ஏஜ் வெல் எஸ்ஜி' திட்டத்தின் கீழ் வீடமைப்பும் வீதிகளும் மேம்பாடு காண உள்ளன. இந்தத் திட்டத்தை தேசிய வளர்ச்சி அமைச்சும் போக்குவரத்து அமைச்சும் இணைந்து வழிநடத்தும்.

ஒவ்வொரு மூத்தோர் நடமாட்ட நிலையத்திற்கும் $400,000 அளிப்பதன் மூலம் அவற்றுக்கான வரவு செலவுத் திட்ட நிதி குறைந்தபட்சம் 50 விழுக்காடு அதிகரிக்கும்," என்றார் அமைச்சர் ஓங்.

8 887181 530005

தமிழ் முரசு சந்தாவுக்கு அழைக்கவும்: 6388-3838

An SPH Media Limited publication

Source: Tamil Murasu @SPH Media Limited. Permission required for reproduction.